வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். CC 400/2020

வழக்கு சாட்சி LW9 / PW2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மருத்துவர், ஆறுமுகசாமி, அறுவை சிகிச்சை நிபுணர், ரெட்டேரி குமரன் மருத்துவமனை | ஜாதி | |
| கணவர்/தந்தை | சின்னதுரை | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 51 |

தேதி 05.05.2025

எதிரி ஆஜர்.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் தற்போது ரெட்டேரியில் உள்ள குமரன் மருத்துவமனையில் அறுவை சிகிச்சை நிபுணராக பணிரிந்து வருகிறேன். 09.06.2013 அன்று நான் ரெட்டேரி குமரன் மருத்துவமனையில் நான் அவசர சிகிச்சை பிரிவில் பணியில் இருந்தபோது, இரவு 8 மணியளவில் குழந்தைசாமி, புழலை சேர்ந்த நபர் தன்னை தெரிந்த நபர் அடித்துவிட்டதாக கூறி சிகிச்சைக்கு வந்திருந்தார். அவரை பரிசோதனை செய்ததில் இடது பக்க முன்தலையில் சிராய்பு காயமும், இடது பக்க தொடையில் வீக்கம் காணப்பட்டது. அவர் தொடையில் வலி இருப்பதாகவும் கூறினார். எனவே இடது பக்க தொடை பகுதியில் முன்கதிர் எடுக்க பரிந்துரை செய்தேன். 02.07.2013 அன்று அவருக்கு நான் அளித்த சிகிச்சை மற்றும் காயத்தின் தன்மை பொறுத்து அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று அளித்தேன். அவரது விபத்து பதிவேடானது அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டது. காயச்சான்றானது அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை ( எதிரி வழக்கறிஞர் ஏதுமின்றி தமது வழக்கினை தானே குறுக்கு விசாரணை செய்ய கோரி அனுமதி அளிக்கப்பட்டது)**

சம்பவம் வீட்டில் நடந்ததாக 09.06.2013ல் சிகிச்சைக்காக வந்திருந்ததாக விபத்து பதிவேட்டில் குறிப்பிட்டு உள்ளேன் என்றால் சம்பவமானது வீட்டில் நடந்ததாக சிகிச்சைக்கு வந்திருந்தவர் கூறியிருந்தார். காயச்சான்றிலும் சம்பவமானது வீட்டில் நடந்ததாக உள்ளது என்றால் ஆமாம். நான் என்னுடைய விசாரணையில் சம்பவமானது 8.15க்கு நடந்ததாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. விபத்து பதிவேட்டில் சுமாராக 8 மணியளவில் நடந்ததாகவே குறிப்பிட்டுள்ளேன். அதனால் சரியான நேரமானது குறிப்பிட்டு கூற இயலாது. நான் தெருவில் அடித்ததாக போலீஸ் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**